இளங்கலை தமிழ்

வருடம் : 2018 - 2019 on wards பருவம் : 6

பாடத்தலைப்பு - முதன்மைத்தாள் - XII

சங்க இலக்கியம் - புறம்

பாடக்குறியீட்டு எண் : 18BTA62C

அலகு : 3.

பதிற்றுப்பத்து - ஏழாம் பத்து மட்டும்


தயார் செய்தவர் :

முனைவர். வை. செல்வசுப்பிரமணியன்

தமிழ்த்துறை.

தொடர்பு எண் : 9952621715.

## ஆசிரியர் கபிலர் பாடிய ஏழாம் பத்து

கபிலர் பாடினார் பத்துப்பாட்டு. அவைதாம் புலாஅம் பாசறை, வரைபோலிஞ்சி, அருவி ஆம்பல், உரைசால் வேள்வி, நாண்மகிழிருக்கை, புதல்சூழ் பறவை; வெண்போழ்க் கண்ணி, ஏம வாழ்க்கை, மண்கெழு ஞாலம், பறைக்குரலருவி; இவை பாட்டின் பதிகம்.

பாடிப் பெற்ற பரிசில்; சிறுபுறமென நூறாயிரங் காணங் கொடுத்து நன்றா வென்னுங் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான். அக்கோ செல்வக்கடுங்கோ வாழியாதன். இருபத்தையாண்டு வீற்றிருந்தான்.

### 1. புலாஅம் பாசறை (1-8) வரிகள்

பலாமரத்திலே பழுத்து வெடித்த பழத்தின் வெடிப்பிலிருந்தொழுகும் வாடைக்காற்று எறியும். பறம்பு நாட்டிற் பொருந்திய பெரிய விறல் படைத்தவனும் ஓவியத்தில் எழுதியது போன்ற வேலைப்பாடமைந்த நல்ல மனையின் கண்ணே இருக்கும் பாவை போன்ற நல்ல அழகும் நலமும் உடையாட்குக் கணவனும் பொன் போலும் நிறமுடைய பூவினையும் சிறிய இலையினையும், புல்லிய அரைப்பகுதியினையுமுடைய; உன்ன மரத்துக்குப் பகைவனும், எமக்கு அரசனும் பூசிப் புலர்ந்த சாந்தினையுடைய அகன்ற மார்பினையும்; குன்றாத ஈகையால் பெரிய வள்ளன்மையினையுமுடையானுமாகிய பாரி.

(9-10 வரிகள்)

முழவினைத்தே பூசிய சாந்தனை மண் புலர்ந்தொழியவும் வேண்டுவன வழங்குவோர் இல்லாமையால் இரவலர் வருந்தவும்; மீண்டும் இந் நிலவுலகிற்கு வருதல் இல்லாத மேலுலகிற்குச் சென்றொழிந்தான்.

(10-18) வரிகள்

ஒள்ளிய வாட்படையையும், வன்மையுடைய களிறுகளையுமுடைய புலால் நாற்றம் பொருந்திய பாசறைக் கண்ணே; நிலவின் ஒளியைப் போல வெள்ளொளி செய்யும் நின் வேற்படையைப் புகழ்ந்து

பாடும் பாணர்; முழங்கும் முழவின் தாளத்திற்கேற்ப ஒத்தறுக்கும் வெறுங்கையை யசைத்துப் பாடும்; விழாக்களாம் போன்ற நின்றுடைய ஆரவாரமிக்க திருவோ-லக்கத்தின் கண்ணே; எம்மை இருகாலும் புரந்த வேள்பாரி இறந்தானாதலின் எம்மை அளிப்பாயாக என்று இரந்து வந்தேனில்லை; நின் புகழைக் குன்றவும் மிகைபடவும் கூறமாட்டேன். செல்வக் கடுங்கோ வாழியாதன் ஈதலால் பொருள் செலவாவது குறித்து மனம் இரங்குவதிலன். இடையறாது ஈதலால் இசை மிகுவது காரணமாக மகிழ்ச்சி யெய்துவதும் இலன் ஈயும் போதெல்லாம் பெரிய வள்ளன்மை யுடையவன் என்று உலகோர் கூறும் நிலைத்த நல்ல புகழ் எம்மை நின் பால ஈர்ப்ப வந்தேன்; காண்.

## ௨. வரைபோ லிஞ்சி.

(5-9) வரிகள்

துறை: செந்துறைப் பாடாண் பாட்டு

வண்ணமும் தூக்கும் அது.

பெயர்: வரைபோலிஞ்சி.

(பசும் பிசிர் .... வேந்தே)

பசிய பொறிகளையுடைய ஒள்ளிய நெருப்பானது ஞாயிறு பலவாய்த் தோன்றும் மாயத் தோற்றங் கொண்டு சுடர்விட்டு எங்கணும் விளங்க; உயிர்கட்குப் பொறுக்க முடியாத மயக்கத்தைச் செய்வதுடன் முழக்கத்-தைச் செய்து திரியும் கூற்றினை இயல்பினைக் கொண்ட மிக்க திறலோடு போர்த்துறை பலவற்றிலும் சிறப்பமைந்த வெற்றியையுடைய அரசே

(1-5) வரிகள்

இழையும் பொன்னரிமாலையு முதலாகிய அணிகளைப் பூண்டு எழுகின்ற பலவாகிய யானைத் தொகுதியும்; மழை மேகமென்று மயங்கத்தக்க கரிய பெரிய பலவாகிய கிடுகை ஏந்திய படையும்; வேல் வாள் முதலிய படையேந்திய வீரர்படையினைச் செயலறப் பொருதழித்த தொய்யப்பட்ட பிடரி மயிரையுடைய குதிரைப் படையு-மாகிய நின் தானை; வலியினையுடைய கடத்தற்கரிய பகைவரது மதிற்பக்கத்தே நெருங்க வளைத்து வந்து மதிற்புறத்தே தாக்கியிருக்கின்றது.

10-12 புனல் பொரு .... பகைவராயின்

நீர் மிக்குக் கரையையலைக்கும் அகழியினையும், மலைபோலும் மதிலினையும் கொண்டு; தமக்குப் பொருந்தாதாரை வருத்துதலை யுடைய பெரிய கையினை-யுடையராய்; நினக்குப் பகைவருமாயினார் வணங்கிய மொழிகளைச் சொல்லி; நின் தாளில் வீழ்ந்து வணங்கி திறை செலுத்துவாராயின்

13-19 புல்லுடை .... நாடே

புல் நிறையவுடைய அகன்ற புலத்தின் கண் பலவாகிய ஆனிரைகளைப் பரந்து மேயவிட்டு; வளப்பத்தையுடைய வயலின் கண் விளைந்த கதிர்களின்றும் உதிர்ந்த களத்திற் சேர்த்துத் தூற்றப்படுவதில்லாத நெல்மணியின் குவியலை, காஞ்சி மரத்தின் அடியிலே சேரத் தொகுத்து வைத்து கன்றினோடலையும் வலிய கையினையுமுடைய உழவர்; அரிய பூவாகிய ஆம்பலைச் சூடிய தலையினை யுடையராய்; அசைகின்ற சிறகையும் வரிகளையுமுடைய வண்டினம் அவ்வாம்பலை மொய்க்குமாறு சூட்டும்; அப்பகைவருடைய கரிந்த இடத்தையுடைய நாடுகள்; புலவர் பாடும் புகழ் பெற்றனவாகும்.

## ௩. அருவியாம்பல்

(1-7) வரிகள் பார்ப்பார்க்கல்லது ... பொய்ப்பறியலையே

பார்ப்பாரையன்றிப் பிறரைப் பணிதல் இல்லாய்; இவ்வாறு பணியாத மனவெழுச்சியால் அழகுறப் பொருந்தி உயிரொத்த நண்பர்க்கல்லது பிறர்க்குக் கண்ணோடியும் அஞ்சுவது இல்லாய். வளைந்த இந்திர வில் போலும் மாலை இடந்தலைக்கும் சாந்து பூசி மணங்கமழும் நின் மார்பை, உரிமை மகளிர்க்கு இன்பந் தருதற்கு விரித்துக் காட்டு-வதன்றிப் பிற பகைவர்க்குக் காட்டுதலிலாய்; நில வரைக்கண் தம் இயல்பிற் திரிந்து நெருங்காலத்திலும் வாயாற் சொல்லிய சொல் பொய்ப்படுவதை நீ அறியாய்

8-12 வரிகள் சிறியலை .... போரேயே.

சிறிய இலைகளையுடைய உழிஞைப்பூ மாலையை யணிந்து பகைப்புலத்தே கொள்ளத்தக்க பொருள் மிக வுண்டாமாறு; திண்ணிய தமிழ் வீரர்களாலாகிய தன் படையை மேன்மேற் செலுத்தி மனைகள் நிலைதளர முழங்கும்

கிழமையுறு போலச் சிறந்து சென்று ஒரு வளைப்பில் இரு வேந்தர்களை வென்று புறங்கண்ட ஒள்ளிய வாளேந்திச் செய்யும் போரில் மேம்பட்ட தானையினையும், வெல்லுகின்ற போரினையுமுடையோனே.

13 - 15 ஆறு மெற்று .... வென்றோய்

பிற வேந்தர்க்குப் படை வீரராயிருந்து பல போர்களில் வெற்றி பெற்றும்; பகைவரிடத்தினின்றும் மாறி நின் தானையில் விரைந்து போந்து நீ கருதியதனையே யாமும் கருதியாயிருக்கும் கருத்துடையே மாயினேம் என்று சூள் மொழிந்தமைந்தனர்; நீயும் நும் குலத்தோர்க்குச் சிறப்பாக அரியவாகிய வன்மையும் கண்ணோட்டமும் கொண்டு மேலும் பல போர்களில் வென்றி சிறந்தாய்

15 - 20 அதனால் .... பலவே

இன்ன இயல்புகளையுடையையாதலால்; சேரர்குடித் தோன்றலே; செல்வக் கோவே செல்வக் கடுங்கோவே; காற்றால் அடிக்கப்பட்ட அலைகள் முழங்கும் முழக்கத்தையுடைய கடலைச் சுற்றெல்லையாகவுடைய அகன்ற உலகத்தே வாழும் நன்மக்கள் செய்த அறம் நிலைபெறுவதொன்றாம் செல்வக் கடுங்கோ வாழியாதனே; இலையடுத்தலை யறியாத பல ஆயிரங்களாகப் பெருகிய வெள்ளமென்றும் எண்ணையும் ஆகிய ஊழிகள் நீ வாழ்வாயாக.

4. <u>உரைசால் வேள்வி</u>.

<u>துறை</u> : காட்சி வாழ்த்து
வண்ணமும் தூக்கும் அது
<u>பெயர்</u> : உரைசால் வேள்வி

1 - 2 வலம்படு .... அம்ம

வெற்றியுண்டாக முழங்கும் முரசினையும்; தப்பாத வாட்படையாற் பெறும் வெற்றியினையும்; பொன்னாற் செய்த பூண்களையுமுடைய வேந்தர்கள் பலர் தாம் உளர். இன்னமும் கேட்பாயாக.

3-11. அறங்கரைந்து ... அவ்வையின்

அறநூல்களை ஓதிப் பயின்று விளங்கிய நாவினையும்;
உயர்ந்த புகழமைந்த வேள்விகள் பல செய்து
முடித்தற்கேதுவாகிய கேள்வியினையுமுடைய அந்தணர்கள்
அரிய கலன்களை நீர்வார்த்துக் கொடுக்கப் பெறுவதால்;
அந்நீரொழுகி மிக்க சேறாகியதால் களிறுகள் நிற்பதற்கு
வெறுத்த மண் நிறைந்த முற்றத்தையும் ஒழுங்காக அமைந்த
பரிசிலரன்றிப் பிறர் செல்லுதற்கரிய காப்பையுமுடைய
அவ்விடத்து நின் பெருமனைக் கண்ணேயிருந்து; சுற்றத்தார்கள்
புறஞ்சிறையிடத்தே வரக் காணினும் தாழ்க்காது.
எஃகு படை யறுத்த கொய் சுவற் புரவி வேல்வாள் முதலிய
படைவீரரை வென்று கொணர்ந்த கொய்யப்பட்ட பிடரியினை
-யுடைய குதிரைகளையும்; அசைகின்ற தேர்களையும்;
(ஆனாக் கொள்கையை யாதலின்) ஈகையில் அமையாத
கொள்கையையுடையை யாதலினாலே

12-20 மாயிரு ... பாசறையானே

கரிய பெரிய வானத்தே ஞாயிறு எழுந்து தோன்றி
பலவாகிய விண்மீன்களின் ஒளியைக் கெடுத்தாற்போல
சேரர் குடியில் தோன்றிப் பகைவரது மிக்க மாறுபாட்டைக்
கெடுத்த கடவுமாறு அணிந்த தொடியினையுடைய
அண்ணலே கரிய நிறம் பொருந்திய விரிந்த கழியிடத்தே
மலர்ந்த நெய்தற்பூவின் இதழினது அழகிய நிறத்தோடு
உயர்ந்தெழுந்த மழை சிகிலாலும் மிக்க செல்வத்தை
வழங்குகின்றாய். அது காரணமாக பசியுடைய சுற்றத்தார்
அப்பசியின் நீக்கியதனால் புகழ் மேவிய தோன்றலே, ஈர
நினது பாசறைக் கண்ணே; நின்றுடைய வலிய தாளை
வாழ்த்தி நினைக் காண வேண்டி வந்தேன்.

## 5. நான்மகிழிருக்கை

துறை : பரிசிற்றுறைப் பாடாண் பாட்டு.
வண்ணமும் தூக்கும் அது
பெயர் : நான்மகிழிருக்கை

1-5 எறிபிணம் ... செல்வ

எதிர்த்துப் பொருத பகைவருடைய வீரம் கெட
விரைந்த செலவினையுடைய நல்ல குதிரைகள்
படைகளால் எறியப்பட்டு வீழ்ந்த வீரர் பிணங்களை
இடறிக் கொண்டு செல்லுதலால் சிவந்த குருதிக் கறை
படிந்த குளம்பினையுடையவாகி; அவற்றின்
தலையிலே விரிந்த தலையாட்டத்தை யணிந்து
செலுத்தி; பகைவரை வஞ்சியாது எதிர்பொருது வென்ற
காஞ்சித் திணைக் கமைந்த வீரர்க்குத் தலைவனே;

வில் வீரராகிய சான்றோர்க்கு மெய்யுறு கருவி போன்றவனே. அடைந்தோர்க்குச் செல்வமாய்ப் பயன்படுபவனே.

6–10 பூணணிந்து ... கணவ

இழையணிந்த உயர்ந்த தேப்பனை செய்தாற்போல் வருகின்ற இளமுலையினையும், மாட்சிமைப்பட்ட வரிகளையுடைய அல்குலினையும், அகன்ற கண்ணினையும் மூங்கிலையொத்த அழகிய மென்மைக்கண் பொருந்திய (தொடியணிந்த) பருத்த தோளினையும்; அழகிய கடவுளரையும் ஏவல்கொள்ளும் கற்பினையும்; சேய்மைக்கண்ணும் சென்று மணம் கமழும் நறிய நெற்றியினையும் செவ்விய அணிகளையுமுடையாட்குக் கணவனே.

11–12 பாணர் ... மார்ப

பாணர் சுற்றங்களைப் புரப்பவனே; பரிசிலர்க்குச் செல்வமாயிருப்பவனே; பூணாரமணிந்து விளங்கும் அகன்ற புகழ் நிறைந்த மார்பினையுடையோனே.

12–17 நின் நாண் மகிழிருக்கை ... மகிழ்ந்தனனே.

இனிய இசை தொடுத்தலையுடைய நரம்பின்பாலமைந்த பாலையாழ் வல்லவனொருவன்; அதனைச் சுவைக்கினிய உறுப்பினையுடைய பாலைப் பண்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக மாறிமாறி யிசைத்தாற் போல; சோற்றையுண்டாக்கும் மழை போல; கள்ளை வழங்கும்; விழாக் களத்தின் செல்வத் தோற்றத்தையுடைய; நின் நாண் மகிழ் இருக்கை நின்னுடைய நாட்காலை இன்ப விருக்கையினை நன்கு கண்டு மகிழ்வுற்றேம்.

## 6. புதல் சூழ் பறவை

__துறை__: செந்துறைப் பாடாண் பாட்டு

வண்ணமும் தூக்கும் அது

__பெயர்__: புதல் சூழ் பறவை.

1–3 வாங்கு .... இரவல

வளைந்த கரிய தண்டினையுடைய இனிய இசைக்குரிய நரம்புகளால் நிறைந்த இசையின்பத்துக்கு இடமாகவுள்ள பேரியாழ்பிடித்தே; பாலைப் பண்ணினை வெளிப்படுத்து சேரனை நினைந்து செல்லும் குறிய வாயினையுடைய இரவலனே.

9 – 20 கருத்தோர் கிழவோனே.

வைகுண்டு மேல் வரும் பகைவரது மிக்க வலியைத்
தடுத்தற்குரிய ஒழுங்கினால் அப்பகைவரால் அழித்தற்
-கரிய படை வகுப்பையும்; நாட்காலையிலே
மழைக் கடைப்பாற் தாங்கிய மலையுச்சியை யொக்கும்.
தோற்றத்தையுடைய பரிசையினை மேலே தாங்கி யெழு
ஒளி விரிந்து விளங்கும் வேற்படையையும்; கின்ற
யுடலிற் பின்னுவது போல பாசு அழற்றுகின்ற மாலை
பாசு விடுதாவினையுடைய; போர்க்கண் அன்றிப்
பிறவாற்றால் இறத்தலை விரும்பாத வீரர்; பனங்
குருத்துடனே சேர்த்துத் தொடுத்த வெற்றித் திரு விரும்பும்
வாகையினது தும்பையையுடைய ஆய் போல; சூர்த்த
ஆக்கையையுடைய முல்லைப் புதரிடத்தே மேயக்கும்
பணிப்புனம்; காட்டிலே பிடவமரத்தின் தொகுத்தது
போலச் சூக்கும் சூக்குளையிலே தங்கும். உயரிய பனிங்குட
பிரவிய சிவந்த பரல்கள் கிடக்கின்ற முரம்பு ன்
நிலத்திலே; அங்கு வாழ்வோர் விளங்குகின்ற ஒளிக்
கதிரையுடைய அழகிய மணிகளைப் பெறுகின்ற
இடம் அகன்ற ஊர்களையுடைய நாட்டிற்கு உரிய
தலைவனான செல்வக் கடுங்கோ வாழியாதன்.
(4 – 9) இழையணி ... என்ப.
இடி முழக்கத்தைப் போன்ற ஓசையினைச் செய்யும்
முரசுடனே தப்பாத வஞ்சினத்தைக் கூறிச் சென்று
பகைவருடைய வேலேந்திய படைக்கூட்டம் செய்யும் போர்
அறக்கெடும்படி யழித்து அவர்களைக் கொன்று அஞ்சினோர்
முதுகிட்டோடச் செய்ததனாலுண்டாகிய பிணங்கள்
நிறைந்த போர்க்களத்தே தோற்ற வேந்தர் படையதாகிய
திறையாகத் தந்த யானையோடு நெல்லையளக்கும்
பறக்கால் தன் வாய் விரிந்து அதனைச் சிந்தும்
புறத்தே யிட்ட செம்முறை தேய்ந்து கழன்றொடுமாறு
நெல்லாகிய உணவை நிறைய அளந்து கொடுப்பன்
என்று அறிந்தோர் சொல்லுவார்கள்

## 7. வெண்போழ்க் கண்ணி.

துறை: பாணாற்றுப் படை
வண்ணமும் தூக்கும் அது
பெயர்: வெண்போழ்க் கண்ணி
(1 – 4) கொடுமணம் ... பெறுகுவை

இசை வல்லோர்க்குரிய கடமைகளை நன்கறிந்த
முறைமையால் யாழ் வாசித்தலில் கைவன்மை வாய்ந்த
பாணனே ; நெடிய புகழ் பெற்ற நின் சுற்றத்தாருடனே
கொடுவேனவென்று இரிடத்தும் பந்திரண்டினும் பெயரையுடைய
பெரிய புகழையுடைய மதுரையூரிடத்தும் பெறப்படுவன
-வாகிய தென்கடலில் எடுக்கப்படும் முத்துக்களோடு நல்ல
அணிகலங்களையும் பெறுவாய்.

(5-12) கொல்படை ... கொன்று

ஏந்திய படையழித்தவர் வேறுபடைகளை ஆராயாது வென்று
குறித்துயர்த்த கொடியானது விண்ணிலே யசைய; ஒளிக்கதிர்
வீசும் மணி பதித்த கொம்மென்னும் வாச்சியத்தோடு
வலம்புரிச் சங்குகள் முழங்க; பலவாகிய களிறுகளின்
சேட்டமான வரிசை தத்தமக்குரிய இடத்தினின்றும்
பெயர்ந்து போர் நிகழும் இடம் நோக்கித் திரிய போர்க்கேற்
-கிளர்ந்த பொருது வீழ்ந்த மக்கள் மாக்களினுடைய
நிணம் விளங்கும் பரந்த களத்திலே; சேட்டமாகிய பெரிய
சிறகுகளையுடைய பருந்துகள்; பிணங்களின் குருதியை
யுண்ண தலை வெட்டுண்டதால் எஞ்சி நிற்கும்
குறையுடலாகிய ஆணவம் மலிந்தாடும் கவந்தத்தோடு
அழகிய வடிவில்லாத பேய்கள் கண்டோர் வருந்துமாறு
அச்சுறுத்த; நாட்டுள்ளோர் அஞ்சி நடுங்க பல
போர்களிலும் எதிர்த்தோரை வென்றழித்து

13-18. நாறிணர் ... பெருமகன்

மணம் கமழ்கின்ற கொன்றைப் பூவின் கொத்துக்களை
விரவித்தொடுத்த வெள்ளிய பனந் தோட்டாலாகிய
கண்ணியினையுடையராய்; வாளின் வாய் உண்டு பண்ணிய
மாட்சிமைப்பட்ட வடுக்களாகிய வரி பொருந்திய
முகத்தை யுடையராய்; நெறிப்புடைய கொம்பும் பெரிய
கண்ணுமுடைய எருத்துக்களோடு; வளைந்த தலையை
-யுடைய அன்ன விலங்குகளின் இறைச்சிகளையுடைய
தாம் கரும்பாசவர் தாழ்ந்த கிழிந்த பாசவர். கத்தியால்
இறைச்சியை வெட்டுதற்குக் கொண்ட அழகனைப் போல
மெய் வடுவும் தழும்பு முதலால்; ஆகிய சந்தனத்தின்
பொலிவு தோன்றாதபடி மறைத்த மார்பினையுடைய
சான்றோர்க்கு) தலைவனும்

19-23 மலர்ந்த ... செலினே.

பூத்திருக்கும் காந்தட்பூ தெய்வத்தால் விரும்பப்படுவதா
-லால் சூடாது பழித்து தாழுண்ட;
வரைந்த. ~~பிறைத்திறையுடைய~~ தும்பியானது பிறை பண்ணைசூழியும்
அப்பாற்கும் இயல்பு கெடும்; பெருமையமைந்த
நெடிய மனையாகிய கற்களால் உயர்ந்த நேரி

மலைக்குரிய வாழியாதனைப் பாடச் செல்குவையாயின்

## 8. ஏமவாழ்க்கை

<u>துறை</u> : செந்துறைப் பாடாண் பாட்டு

வண்ணமும் தூக்கும் அது

<u>பெயர்</u> : ஏம வாழ்க்கை

1–4 கால் கழப்பாக .... அதிர

பகைவர் நாட்டிடத்தே சென்றமைந்துத் தங்கிய பாசறை நகரில்; மோதுகின்ற காற்றாகிய குறுந்தடி அலைக்க கடலாகிய முரசு முழங்கியது போல மிக்க முழக்கத்தைச் செய்யும் ஒலிக்கின்ற ஓசையையுடைய முரசமானது விரிந்த பெரிய வானத்திடத்தே முழங்க

5–8 வெவ்வரி... பெற லல்லது

கிண்டார் விருப்பத்தக்க கோலங்கள் நிலைபெற்ற பகைவர் மதிலை யழித்தன்றி; உணவு உண்பது இல்லையென்று உண்ணாது கழித்த நாட்கள் பல கழியவும்; தம் நெஞ்சம் போரே விரும்புதலால் எழுந்த ஊக்கத்தையுடையராய்; உடல்வலி குன்றி அசைவுற்று மெலியும் மெலிவினையுடைய பகைவரது உறைவிடத்தைத் தாம் வென்று கைக்கொண்டாரன்றி

(9–14) வேந்தர் .... பெறுப கொல்

பகை வேந்தர் எறிப்போர்ந்த களிற்றினைக் கொன்று அதன் மருப்பினைக் கைக்கொண்டு கள்ளுக் கடையின் கொடி யசைந்து தோன்றும் கடைத்தெருவை அடைந்து, அரிய கள்ளுக்கு விலையாகத் தந்து அக்கள்ளைப் பெற்றுண்டபின்பு; மகிழ்ச்சி மிக்கு அச்சத்தை யறியாத இன்பமே நுகரும் வாழ்க்கையையுடைய உத்தரகுருவில் வாழும் மக்களைப் போல; மிக்க விருப்பமுற்று; நாடோறும் இனிய உவகை பொருந்தியுறையும் பொழுதுகள் பல பெறுவார்களோ; பெறுதல் அரிது போலும்.

## 9. மண்கெழு ஞாலம்

<u>துறை</u> : வஞ்சித் துறைப் பாடாண் பாட்டு

<u>வண்ணம்</u> : ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்

<u>தூக்கு</u> : செந்தூக்கும் வஞ்சித் தூக்கும்

<u>பெயர்</u> : மண்கெழு ஞாலம்

1–10 மலையுறழ் .... வேந்தே

மலை போலும் யானையின் மேல் வானளாவ எடுத்த வெற்றிக் கொடியானது மலைமேலிருந்து வீழும் அருவி போல

இடந்தோறும் அசைந்து விளங்க, கடல் போன்ற தானையின் நடுவே கடிய முழக்கத்தையுடைய முரசு; காற்றால் மோதப்பட்ட கடல் போலக் கூடி முழங்க; பகைவரை எறிதலால் சிதைவுற்ற வாள் வீரரும்; பகைவர் மேற் பாய்தலால் ஓய்வுற்ற குதிரைகளும்; ஆராய்ந்து தெரிந்து கொள்ளப்பட்ட போர் வேட்கையினையுடைய வீரர்களும் கொண்ட தானையுடன் சென்று; போரிலே பட்டு வீழும் பிணங்கள் குவிந்து உயரப் பகைவரைக் கொன்றழித்து; அவர் நாட்டில் கைப்பொருளுடைய குடிகளை வாழச்செய்த வெற்றி வேந்தனே

13–17 நிலம் .... முந்திசினோரே

நிலம் தன்பால் விளையும் விளைபொருள்களை மிக விளைவிக்க பயம் கெழு வெள்ளி சுடர் தினம் தணிய வெயிலது வெம்மை பரம்பிக்காது தணிந்து நிலவ; உலகிற்கு நல்ல பயனைச் செய்யும் வெள்ளியென்னும் கோள் மழைக்குக் காரணமாகிய ஏனை நாள் கோள்களுடனே சென்று நிற்ப; வானம் மழை முகில்கள் நிரம்பப் பரவி நல்ல மழையைப் பெய்வது காரணமாக இடம் அகன்று விளங்கவே மழை தன் பெயரால் உலகு புரக்கும் செயலிற்று நிற்ப நான்காய் வேறுபட்ட அகன்ற திசையிடமெல்லாம் ஒன்று போல ஆக்க மெய்த விளங்குகின்ற அரசவாணையாகிய திகிரியைச் செலுத்திய நின் முன்னோர்

11–12 நின்போல் .... ஞாலம்

நின்னைப் போல தெளிவாக மாறாத கொள்கையை யுடையவர்களாயிருந்தமையால் இவ்வகைச் செறிந்த நிலவுலகத்தை இனிது ஆண்டார்கள்.

## 10. பறைக்குரலருவி

திணை: செந்துறைப் பாடாண் பாட்டு

வண்ணம்: ஒழுகு வண்ணம்

தூக்கு: செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்

பெயர்: பறைக்குரலருவி.

1–5. களிறு – நல்லமர்த்து

களிறுகளை நெறியறிந்து செலுத்தும் பயின்ற தாளினையும் குதிரைகளைப் பொருந்தற்குச் செலுத்திப் பயின்ற தாள் வலிமையினையும், பகைவர் செய்யும் போரைக் கெடுத்த வேற்படையினையும்; கல்லொடு பொருது பயின்ற தோளினையும்; வில்லேந்திப் பொருது பகைவரை வருத்திய நல்ல வெற்றியினையுமுடைய

6-11 வண்டுறை ... பெரும

வண்டுகளும் மொய்த்துப் பாடுதல் இல்லாத தண்ணிய மலையினது கொழுந்த அரும்பு போன்ற சுடர்வினையுடைய வெள்ளிய மணங்கமழ்ந்தோடு இனிய சுனையிடத்து மலர்ந்த குவளைப் பூ ஆகிய கண்ணியைச் சூடி போர்க்கு வேண்டும் மதம் மிகுந்து மிக்க சினத்தையுடைய பகை மன்னர் என்றும் தமக்கே யுடைமையாகப் பெற்ற நிலைமையினையுடைய நல்ல போர்களை வருந்தியாது பொருதழித்து, அவருடைய போர்வன்மையைச் சிதைத்து இறுதியாக அவரது தலைமையினையு மறக்கெடுத்த; வெற்றி பொருந்திய பெரிய கழலணிந்த வீரர்க்குத் தலைவனே!

12 - 16 நகையினும் ... மார்ப

விளையாட்டாலும் பொய் கூறுதலை யில்லாத வாய்மையினை யும், பகைவர் தம் புறத்தே இகழ்ந்து கூறும் சொற்களை ஏற்றுக் கொள்ளாத குற்றம் நீங்கிய அறிவினையும்; தூணார மணிந்த மார்பினையும் உடையோய்; நாணம் நிறைந்து பெரிய மடமென்னும் குணம் நிலைபெற்று; கற்பு நெறிக்கண்ணே தங்கின. கமழும் சுடர் நுதல் மணம் கமழும் ஒளி பொருந்திய நெற்றியினையுடைய உயர்ந்தவட்கும் கணவனே.

17-19 தொலையா ... இன்புறுத்தினை

குன்றாத கோட்பாட்டினையுடைய சான்றோராகிய சுற்றத்தார் நீங்காது சூழ; போர்க்களத்தே பகைவரை வென்று செய்யும் களவேள்வியால் வெற்றிக் கடவுட்குப் பலியூட்டி அதனை மகிழ்வித்தாய்; வீருலகத்து வாழும் சான்றோரை அவர் செய்த வீரச் செயல்களைப் புலவர்பாட இருந்து கேட்குமாற்றால் மகிழ்வித்தாய்.

20-22 வணங்கிய அண்ணல்

நட்பமைந்த சான்றோர்க்குப் பணிந்தொழுகும் மென்மையினையும், பகைவர்க்கு வணங்காத ஆண்மையினையுமுடைய; இளந்துணைப் புதல்வரின் இளந்துணையாகிய மக்களைக் கொண்டு முதியராகிய பெரியோர்க்குரிய தொண்டினைச் செய்வித்து; தொன்று தொட்டுத் தம் கடமையினை ஆற்றிய; வெல்கின்ற போரையுடைய அண்ணலே!

23-27 மாமேலோர் .... நாளே .

தேவர்கள் வாழும் பொன்னுலகத்திலும் கேட்டிராத; கிளியென்று மனோகரமானதாக ஒலிக்கும் பறை போன்ற முழக்கத்தையுடைய அருவிகள்; மிகப்பெரியதாகிய உச்சியினையுடைய சிகரங்கள் தோறும் நிறைந்து விளங்கும்; அயிரை யென்னும் நெடிய மலையைப் போல நீ வாழும் நாள் குறையாது பெருகுக.

## பகுதி - அ

1. உன்னமரத்தின் பகைவன் யார்?
2. பதிற்றுப்பத்து நூற்குறிப்பு தருக.

## பகுதி - ஆ

1. செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் எங்ஙனம் புகழ்கின்றார்?
2. 'வரைபோலிஞ்சி' என்ற தலைப்பிற்கான விளக்கம் யாது?
3. 'அருவியாம்பல்' என்ற தலைப்பில் செல்வக்கடுங்கோ வாழியாதனை கபிலர் எங்ஙனம் வாழ்த்துகின்றார்?
4. 'கபட்சி வாழ்த்து' விளக்குக
5. 'நாண்மகிழிருக்கை' என்ற தலைப்பில் வாழியாதனின் சிறப்புகள் கபிலரால் எங்ஙனம் வெளிப்படுகின்றது?
6. 'புதல்சூழ் பறவை' என்ற தலைப்பில் வாழியாதனின் போர்ச்சிறப்பும், கொடையும் எவ்வாறு விளக்கப்படுகின்றது?
7. 'ஏமவாழ்க்கை' என்ற தலைப்பிற்கான கருத்தினை எழுதுக
8. செல்வக்கடுங்கோ வாழியாதனின் முன்னோர்கள் 'மண்கெழுஞாலம்' என்ற தலைப்பில் எங்ஙனம் புகழ்ந்துரைக்கப்படுகின்றனர்?
9. வாழியாதனின் பண்பு நலன்கள் கபிலரால் பறைக்குரலருவி என்ற தலைப்பில் எங்ஙனம் விளக்கப்படுகிறது?

## பகுதி - இ

1. பதிற்றுப்பத்தில் செல்வக்கடுங்கோ வாழியாதனின் பண்பு நலன்கள், கொடைச்சிறப்பு கபிலரால் எங்ஙனம் பாராட்டப்பெறுகின்றது?